


தவளை தான் ஹீரோ!

மேக்ஸ்

தவளை தான் ஹீரோ!

மேக்ஸ்





மழை மேகங்களால் வானம் இருளத் தொடங்கியது. சூரியன் காணாமல் போனது.





“ஆஹா, மழை, ஹையா!” என்று தவளை மகிழ்ந்தது. மழைத் துளிகள் அதன் மேனியை நனைக்கத் தொடங்கின. மழை என்றால் தவளைக்கு கொள்ளை ஆசை!

மழை வலுக்கத் தொடங்கியதும் தவளை உற்சாகமாக குதித்தாடியது. "மழை , மழை !. என் உடைகளெல்லாம் ஈரமாகிக் கொண்டிருக்கின்றன!" என்று சத்தமாக பாடியது.



வானம் மிகவும் இருண்டு கொண்டே போனது. கன மழை கொட்டியது.
தவளையாலேயே இதை தாங்க முடியவில்லை. சொட்டச் சொட்ட நனைந்து கொண்டு வீட்டுக்கு ஓடியது.



தவளை ஒரு சூடான கோப்பை தேநீர் போட்டு குடித்தது. மழைத்துளிகள் ஜன்னலில் முட்டி மோதிக் கொண்டிருந்தன. ஆனால் வீட்டினுள்ளே கதகதப்பாக இருந்தது. மூன்று நாட்கள் மழை கொட்டித் தள்ளியது. தவளை பொறுமை இழந்தது. தனது நண்பர்களான பன்றியும் வாத்தும் முயலும் எப்படி இருக்கிறார்களோ, மழை தொடங்கியதிலிருந்து அவர்களைப் பார்க்க முடியவில்லையே என்று கவலைப்பட்டது.



ஐந்தாவது நாள், ஆற்றில் நீர்மட்டம் உயரத் தொடங்கியது. தவளையின் வீட்டிற்குள் தண்ணீர் வந்துவிட்டது.

முதலில், தவளை இதை விளையாட்டாய் நினைத்தது, ஆனால் நேரமாக ஆக கவலைப்படத் தொடங்கியது.



தவளை வாத்தின் வீட்டிற்கு விரைந்தது. அங்கும் வெள்ளம்.

"எங்கிருந்துதான் இவ்வளவு தண்ணீர் வருகிறதோ" என்று வாத்து விரக்தியாய் கேட்டது.

“நதி கரைபுரண்டு ஓடுகிறது. வா, பன்றியின் வீட்டுக்கு போகலாம்" என்றது தவளை.




இரண்டும் வெள்ள நீரில் தத்தளித்துக்கொண்டு சென்றன.


பன்றி தன் வீட்டு பரணில் இருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. "என்னுடைய சாமான்களெல்லாம் நனைந்து விட்டன" என்று அழுதது.



பன்றியின் வீட்டிற்குள் நாற்காலிகளும்
மேஜையும் நீரில் மிதந்து கொண்டிருந்தன.
பொருட்களெல்லாம் தாறுமாறாய் கிடந்தன.
யாரும் அங்கே தங்க முடியாது.
"முயலின் வீட்டுக்கு போய் பார்ப்போம்" என்றது
தவளை.



முயலின் வீடு நதிக்கு நடுவில் ஒரு தீவில்
இருந்தது. வாசலில் நின்று கொண்டிருந்த முயல்
கையசைத்து அழைத்தது.
"வீட்டுக்குள் வாருங்கள். என் வீடு மேட்டில்
இருப்பதால் தண்ணீர் புகவில்லை." என்றது.




வீட்டினுள் கதகதப்பாக இதமாக இருந்தது. மூன்றும் அடுப்பின் முன் உட்கார்ந்து தங்கள் ஈரமான உடைகளை காயவைத்துக் கொண்டன. தங்கள் வீடுகளில் வெள்ளம் புகுந்துவிட்ட செய்தியை தெரியப்படுத்தின. முயல் "நீங்கள் அனைவரும் இங்கேயே தங்கிக் கொள்ளலாம். சாப்பாட்டுக்கும் கவலை இல்லை" என்றது.

அனைவரும் முயல் சமைத்து வைத்திருந்த கஞ்சியை பசியாரச் சாப்பிட்டுவிட்டு களைப்புத் தீர ஓய்வெடுத்தன. வெளியே, மழை விட்டபாடில்லை.



மூன்றும் முயலின் விருந்தாளிகளாக பல நாட்கள் தங்கி இன்பமாக இணைந்திருந்தன. மழை பெய்து கொண்டே இருந்தது.




குந்தித் தின்றால் குன்றும் கரையும் அல்லவா? ஒரு நாள் உணவுப்பொருள் எல்லாம் தீர்ந்துவிட்டதை கண்டன. சாப்பிட ஒன்றும் இல்லையே என்று முயல் கவலைப்பட்டது. "நமக்கு உதவி கிடைக்காவிட்டால் நாம் அனைவரும் செத்துவிடுவோம்" என்று அழுதது வாத்து. " நான் சாக விரும்பவில்லை" என்றது தவளை.



மறுநாள் மிச்சம் மீதி இருந்த எல்லாவற்றையும் சாப்பிட்டன. யாருக்கும் பசி அடங்காவிட்டாலும் இனி என்ன செய்யவேண்டும் என்று யாருக்கும் தெரியவில்லை..

மழை நின்றுவிட்டாலும் வெள்ளம் அபாய அளவுக்கு மேலேயே நீடித்தது.



"நான் நீச்சலடித்து அக்கரைக்குப் போய் உதவிக்கு யாரையாவது கூட்டி வருகிறேன்" என்றது தவளை. இதைக்கேட்ட முயல் "வெள்ளம் வேகமாகப் பாய்ந்து கொண்டிருக்கிறது. இவ்வளவு பெரிய நதியைக் கடப்பது மிகவும் ஆபத்தானது" என்று அஞ்சியது. தவளை ஆர்வத்துடன் "என்னால் முடியும். நம்மில் நான் தான் நன்றாக நீச்சல் அடிப்பவன்" என்றது. அனைவரும் ஒப்புக் கொண்டார்கள்.




தவளை தைரியமாக வெள்ளத்தில் இறங்கியது. அதன் நண்பர்கள் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தவளை வெகு தொலைவில் சென்று மறைந்தது.

ஆற்றுவெள்ளம் சில்லென்று குளிரடித்ததைப் பற்றி தவளை கவலைப்படவில்லை. பசியோடு இருக்கும் வாத்து பன்றி முயல் இவற்றின் முகம் தான் அதன் மனதில் இருந்தது.




போகப்போக ஆற்றின் வேகம் கூடிக்கொண்டே போனது. களைத்துப்போன தவளை மிக மெதுவாகவே நீந்த முடிந்தது. திடீரென்று வெள்ளம் தவளையை அடித்துக்கொண்டு போனது.



தவளை நீரில் முழுக ஆரம்பித்தது. இதற்கு மேல் நீந்த முடியாத தவளை "நான் முழுகி சாகப் போகிறேன். இனி என் நண்பர்களை பார்க்கமுடியாது" என்று வருந்தியது.



அப்போது ஒரு பரிச்சயமான குரல் "ஹலோ! யாரிது?" என்று கேட்டுக் கொண்டே தவளையை தூக்கி படகில் ஏற்றியது. எலி தான் அது!
கொட்டிய மழையால் வந்த வெள்ளம், பசியால் வாடும் நண்பர்கள், உதவி தேடி தான் கிளம்பியது பற்றியெல்லாம் சொன்னது தவளை.



"இனி கவலைப்படாதே! நீண்ட பயணத்திற்கு எப்போதும் ஆயத்தமாயிருக்கும் என் படகில் எல்லோருக்கும் உணவு இருக்கிறது" என்று ஆறுதல் கூறியது எலி.
உதவிக்காக நண்பர்கள் காத்திருக்கும் முயலின் வீடு நோக்கி எலி படகை செலுத்தியது.



தவளை படகில் வருவதைக் கண்ட பன்றியும் முயலும் வாத்தும் மகிழ்ச்சியாக வரவேற்றன. அது சரி, ஆனால் தவளையோடு கூட வருவது யார்?

அவர்களின் அருமை நண்பன்
எலியா அது?
கண்களை நம்ப முடியவில்லையே!



படகில் ரொட்டி, தேன், வெண்ணை, காய்கறிகள், கிழங்குகள் என்று நிறைய உணவுப் பண்டங்களை சேர்த்து வைத்திருந்தது எலி.



“எங்களை காப்பாற்றினாய் நண்பா” என்று முயல் எலியிடம் நன்றி கூறியது. “நீங்கள் நன்றி சொல்ல வேண்டியது எனக்கல்ல தவளைக்குத் தான். உயிரைப் பணயம் வைத்து ஆபத்தான வெள்ளத்தில் நீந்தி வந்து என்னைக் கண்டது தவளை“ என்றது எலி. நண்பர்கள் தவளையை அன்போடு பார்த்தார்கள். எலி சொன்னது முழுக்க முழுக்க உண்மையில்லை என்றாலும் தவளை மிகவும் பெருமிதம் அடைந்தது.





அதன்பிறகு நிலைமை முன்னேறத் தொடங்கியது.
தப்பிப் பிழைத்ததை நண்பர்கள்
கொண்டாடினார்கள்.
தவளை தான் இப்போது ஹீரோ!
வெயில் அடிக்க ஆரம்பித்துவிட்டது.
நீர்மட்டம் குறைய தொடங்கியது.

இரண்டு தினங்களில் வெள்ளம் வடிந்து விட்டது.
தவளையும் பன்றியும் வாத்தும் தத்தமது
வீடுகளுக்கு திரும்பின.



எங்கு பார்த்தாலும் சேறும் சகதியுமாய் இருந்தது.
“கவலைப்படாதீர்கள்” என்றது எலி. அதன்
உதவியுடன் எல்லாவற்றையும் சுத்தப்படுத்தி
ஒழுங்குபடுத்தினார்கள்.
ஆனால் எதுவுமே முன்பு போல் இல்லை.
அவர்கள் அந்த பயங்கரமான வெள்ள
அனுபவத்தை மறக்கவே முடியாது தானே?

முற்றும்.



அடைமழையால் பெருக்கெடுத்தோடும் வெள்ளத்தில் தவளையும் நண்பர்களும் மாட்டிக்கொள்கிறார்கள். நண்பர்களுக்கு உதவுவதற்காக தனது உயிரைப் பணயம் வைக்கும் தவளை தான் இக்கதையின் ஹீரோ!

மேக்ஸ் பல விருதுகள் பெற்ற ஒரு எழுத்தாளர், அவரது கதைகள் வாழ்வின் அடிப்படை கொள்கைகளை மென்மையான நகைச்சுவையுடன் தொட்டுச் செல்கின்றன.